செந்தமிழ்த் தொண்டர் ஆற்றுப்படை

பாவலர் மணி

காரை-இறையடியான்

பாத்திமா பதிப்பகம்

செந்தமிழ்த் தொண்டர் ஆற்றுப்படை

தனித்தமிழ்த் தென்றல், பாவலர் மணி

காரை-இறையடியான்

பாத்திமா பதிப்பகம்

67, காசியார் வீதி, காரைக்கால்

முதற் பதிப்பு : 1991
உரிமை : ஆசிரியருக்கே.

ஆசிரியரின் பிற நூல்கள் :

1.	திருவருட் பாவை	அச்சில்
2.	திருநபி இரட்டைமணி மாலை	2 00
3.	காரைக்கால் மசுத்தான் சாகிபு வலியுல்லா வரலாற்றுப்பேழை	20 00
4.	தமிழமுதம் [தமிழக அரசின் பரிசு பெற்றது]	20 00
5.	வாழ்வியல்	12 00
6.	அறிவியல் ஆத்திசூடி விளக்கவுரை	9 00
7.	கல்லறைக்காதல் [புதுவை அரசின் பொருளுதவி பெற்றது]	8 00
8.	கன்னித்தமிழ் வளர்த்த காரைக்கால் அம்மையார்	8 00
9	இளந்தென்றல் [குழந்தை இலக்கியப் போட்டியில் பரிசு பெற்றது]	அச்சில்
10.	நபிமொழிக் குறள்	அச்சில்

விலை : ரூ. 5-00

மேலட்டை ஓவியம் : காரை சிவா.

அச்சிட்டோர் :
கோமதி அச்சகம்
41, சூரப்பமுதலி தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

இலக்கியச் சுடர், எழுத்து வேந்தர், பல்கலைச் செல்வர்
பேராசிரியர் மு. சாயபு மரைக்காயர்
அறிஞர் அண்ணா அரசினர் கலைக்கல்லூரி
காரைக்கால்.

அணிந்துரை

அருந்தமிழிலுள்ள தொன்மையான சிற்றிலக்கிய வகைகளுள் ஆற்றுப்படையும் ஒன்றாகும். ஆற்றுப்படை இலக்கியமரபு தமிழ் மொழியில் மட்டும் காணப்படும் தனிச்சிறப்பாகும்.

ஆற்றுப்படையாவது வழிப்படுத்துதல் அல்லது நெறிப்படுத்துதல் என்ற பொருளைத் தரும். ஒரு வள்ளலிடம் பரிசிலும் பாராட்டும் பெற்ற ஒருவன், அப்பரிசிலைப் பெற விழையும் மற்றொருவனை அவ்வள்ளலிடத்து ஆற்றுப்படுத்துவதாய் இவ்வகை இலக்கியம் அமையும்.

''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்''

என்று புறத்திணை இயலில் தொல்காப்பியர் ஆற்றுப்படைக்கு இலக்கணம் கூறுகின்றார்.

புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் ஒரு துறையாக விளங்கிய ஆற்றுப்படை, பின்னர் ஓர் இலக்கிய வகையாக வளர்ச்சி பெற்றது. திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) என்று பத்துப் பாட்டில் செம்பாதி ஆற்றுப்படை இலக்கியங்களாக அமைந்துள்ளமை ஈண்டு எண்ணத் தக்கது.

சங்ககால ஆற்றுப்படை நூல்களுக்குப் பின்னர் நெடுங்காலமாக இவ்விலக்கிய வகை தோன்றவில்லை.

18 ஆம் நூற்றாண்டில் கச்சியப்ப முனிவர். "திருத்தணிகை ஆற்றுப்படை" என்னும் நூலை இயற்றினார். பின்னர் 19 ஆம் நூற்றாண்டில் நாகூர் குலாம் காதிறு நாவலர் "புலவராற்றுப்படை"யை வழங்கினார்.

இவ்விருபதாம் நூற்றாண்டில் "ஞானியார் ஆற்றுப் படை" "மன்பதை ஆற்றுப்படை", "தமிழ் மகன் ஆற்றுப்படை" "மாணாக்கர் ஆற்றுப்படை" "காதலி யாற்றுப்படை", "புண்ணியராற்றுப்படை", "செந்தமிழ் ஆற்றுப்படை," "ஈழப்புலி ஆற்றுப்படை" என்றெல்லாம் முப்பதுக்கும் மேற்பட்ட ஆற்றுப்படை நூல்கள் அச்சில் கிடைக்கின்றன.

இவ்வரிசையில் தமிழ்கூறும் நல்லுலகுக்குப் புதிய வரவாக, "செந்தமிழ்த் தொண்டர் ஆற்றுப்படை"என்னும் இந்நூல் வெளிவருகின்றது. "தனித்தமிழ்த்தென்றல்" பாவலர் மணி, காரை—இறையடியான் இந்நூலை எழுதியுள்ளார். மற்ற ஆற்றுப்படை நூல்களோடு ஒப்பு நோக்கத்தக்க உயர்வும், சிறப்பும் உடைய இந்நூல் பல புதிய பெருமைகளையும் பெற்றுள்ளது

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான "கூத்தராற்றுப் படை" எனப்படும் "மலை படுகடாம்" 588 அடிகளில் அமைந்து, அளவால் பெரியது என்னும், பெருமையை இதுகாறும் பெற்று வந்தது. "செந்தமிழ்த் தொண்டர் ஆற்றுப்படை" என்னும் இந்நூல் அதைப்போல் ஏறத்தாழ இருமடங்காக 1072 அடிகளில் அமைந்து, ஆற்றுப்படை இலக்கிய வகையில் அளவால் மிகப்பெரியது என்னும் புதுப்பெருமையைப் பெறுகின்றது.

செந்தமிழ்த் தொண்டர் சிவ. கண்ணப்பாவின் எழுபத்திரண்டாம் பிறந்த நாளை ஒட்டி வெளிவரும் இந்நூலைப் பாவலர்மணி காரை-இறையடியான் ஆயிரத்து எழுபத்திரண்டு அடிகளில் அமைத்துப் பாடியிருக்கும் திறம் பாராட்டற்குரியது.

ஆற்றுப்படுத்தப்படுவோராகக் கூத்தர், பாணர் பொருநர், விறலியர் ஆகிய நால்வரை மட்டுமே

தொல்காப்பியம் கூறியிருக்க, பின்னர்த் தோன்றிய பன்னிரு பாட்டியல் அவர்களோடு புலவரையும் சேர்த்துப் பாடியுள்ளது (பன்னிரு பாட்டியல் நூற்பா. 202). அந்த வகையில் இந்நூல் மற்றுமோர் புலவராற்றுப் படையாக விளங்குகின்றது.

செந்தமிழ்த் தொண்டர் சிவ. கண்ணப்பாவால் பட்டமும் பாராட்டும் பெற்ற இந்நூலாசிரியர், அத்தகு சிறப்புப் பெற விழையும் மற்றொரு பாவலரை அவரிடம் ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. திருமுருகனிடம் ஆற்றுப் படுத்தப்பட்ட நூல் ''திருமுருகாற்றுப்படை'' எனப் பெயர் பெற்றதைப் போன்று, செந்தமிழ்த் தொண்டரிடம் ஆற்றுப்படுத்தப்படும் இந்நூல் ''செந்தமிழ்த் தொண்டர் ஆற்றுப்படை'' என்னும் பொருத்தமான பெயரைப் பெற்றிருக்கின்றது.

அடைக்கலம் தேடி வந்தவரை எல்லாம் வாழ வைக்கும் புதுவை மாநிலத்தின் சிறப்புக்கள், கவின்மிகு காரைக்காலின் பெருமைகள், பாட்டுடைத் தலைவராகிய சிவ கண்ணப்பாவின் பண்புநலன்கள், காரைக்காலுக்கும் புதுவைக்கும் இடையில் அமைந்துள்ள ஊர்களின் சிறப்புக்கள், சிவ. கண்ணப்பா காலத்துப் புதுவையின் அரசியல் தலைவர்கள், அறிஞர் பெருமக்கள், புலவர்கள், புரவலர்கள் பற்றிய குறிப்புக்கள் யாவும் இந்நூலில் அழகுறப் பாடப்பட்டுள்ளன.

''பக்கம் வந்திடும் பல்கலைப் புலவனின்
சிக்கலை யோட்டிச் செல்வம் தந்து
தக்க வள்ளலாய்த் தவழ்கண் ணப்பா
மக்கள் தலைவன்; மதித்தே னப்பா''

(176- 179)

என்று பாடத் தொடங்கும் பாவலர்,

''ஏந்தல் இவனின் ஏற்றம் பெரிதே'' (33 3)

என்று வியந்து மகிழ்ந்து,

"எக்குழு புதுவையில் ஏற்பட் டாலும்
அக்குழு சிறக்க அரும்பணி தருபவன்
தொண்டில் பழுத்த தூய னான
கண்டு நிகர்த்த கண்ணப் பாவே"

(434—437)

என்று தம் பாட்டுடைத் தலைவனின் பெருமைகளை உணர்ந்து பாடுகிறார்.

சிவ. கண்ணப்பாவின் சிறப்புகளைச் சொல்வதோடு அமையாமல், அவர் காலத்துப் புலவர்கள், புரவலர்கள் அரசியல் தலைவர்கள் பற்றியும் அறிவதற்கு இந்நூல் துணைபுரிகின்றது. எனவே ஒரு குறிப்பிட்ட காலத்துப் புதுவையின் இலக்கிய வரலாறாகவும், வரலாற்றுப் பெட்டகமாகவும் இந்நூல் விளங்குகிறது எனலாம்.

ஆற்றுப்படையின் இலக்கணங்கள் முழுமையாக இந்நூலில் பேணப் பட்டுள்ளன. ஆற்றுப்படுத்தப்படும் புலவன் செந்தமிழ்த் தொண்டரிடம் சென்றால், அவனுக்கு என்னென்ன பரிசில்கள் கிடைக்கும் என்பதைப் பட்டிய லிட்டுக் காட்டுகிறார் காரை-இறையடியான்.

"கற்றநின் பெருமை வெற்றி யாகும்;
அற்றிடும் துன்பம் உற்றிடும் இன்பம்;
உதவி கிடைக்கும்; உனக்கோ உயர்ந்த
பதவி கிடைக்கும்; பணமும் கிடைக்கும்;

பட்டம் கிடைக்கும்; பணிக ளாற்றத்
திட்டம் கிடைக்கும்; தெளிவு கிடைக்கும்"

(1057—1062)

பொதுவாக ஆற்றுப்படை நூல்களில் இயற்கை வருணனை சிறப்பாகப் பாடப்பட்டிருக்கும். இந்நூலில் இயற்கை வருணனைகளோடு வழியில் காணப்படும் ஒவ்வோர் ஊரின் சிறப்பும் பெருமையும் மிக அழகாகப் பாடப்பட்டுள்ளது. காரைக்காலிலிருந்து புறப்படும் புலவன் தரங்கம்பாடி, தில்லையாடி, திருக்கடையூர், பூம்புகார், சீர்காழி, கொள்ளிடம், சிதம்பரம், கடலூர் வழியாகப் புதுவை மாநிலத்திற்குள் நுழைகிறான். வழியில் காணும் இந்த ஊர்களின் சிறப்புக்களைச் சுருக்கமாகவும் செறிவாக வும், நறுக்காகவும், நயமாகவும் பாடியுள்ளார் பாவலர் மணி காரை—இறையடியான்.

"ஊரழ குக்கோ உயர்ந்த புதுவை
வேராய் நிற்கும் வியன்தெரு வெல்லாம்
நேராய் நிற்கும் நிலைதனைக் காண்பாய்"

(1025—1027)

என்று புதுவையின் அழகைப்பாடும் பாவலர் அரிக்கமேட்டு அகழ்வாய்வு, வீராம்பட்டினச் சிறப்பு போன்ற வரலாற்றுக் குறிப்புக்களையும் மறவாமல் கூறியுள்ளார்.

சமகாலத்துச் சிந்தனைகளும் ஆங்காங்கே பொலிவுடன் திகழ்கின்றன. காவிரி நீர் வராததால் வறண்டு கிடக்கும் கொள்ளிடத்தைக் காட்டும் கவிஞர்,

"ஓங்குநீர்க் காவிரி ஓடுவெள் ளத்தைக்
கொள்ளிட மாகிய கொள்ளிட மெனுமூர்
வெள்ளமில் லாற்றின் விரிமணல் செறிய
வெற்றாய் விளங்கும் வியன்புகழ்க் காவிரி
வெற்றி பெறுநாள் விரைந்து வருக"

[882...867]

என்று பாடி, காவிரிச் சிக்கல் விரைந்து தீர வேண்டுமென்ற தம் விழைவையும் பாடுகின்றார்

புதுச்சேரி என்றாலே மதுச்சேரி என்று மயங்குபவர்கள் உண்டு. புதுவையில் மதுக்கடைகள் மலிந்திருப்பதால் தாம் ஆற்றுப்படுத்தும் புலவன் வழிமாறிச் சென்றுவிடக் கூடாது என்ற பொறுப்புணர்வோடு,

"மலிவாய்க் கிடைக்கும் மதுக்கடை சென்றால்
நலிவா யதனால் நன்னெறி நடப்பாய்"

(1037—1038)

என்று அறிவுறுத்தி மதுவிலக்கையும் குறிப்பாகக் கூறுகின்றார்.

பதிப்பாண்டை நோக்காமல் பயில்வார்க்குச் சங்க காலத்து ஆற்றுப்படை போன்ற உணர்வைத் தரவல்லது இந்நூல்! புதுவைக்குப் புகழ்சேர்க்கும் இந்நூலைத் தந்துள்ள பாவலர் மணி கானரா—இறையடியான் நம் அனைவரின் பாராட்டுக்கும் உரியவர். புதுக் கவிதைப் போதை பெருகியுள்ள இவ்வேளையிலும், மரபுநெறி மாறாமல் அழகிய நூலைத் தந்துள்ள இவரைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொண்டால், தமிழன்னைக்கு மேலும் சில அணிகலன்கள் கிடைக்கும் என்பது திண்ணம்.

36, பெருமாள் கோவில் வீதி — அன்பில் இன்புறும்
காரைக்கால் — மு. சாயபு மரைக்காயர்

என்னுரை

தமிழ்த் தொண்டருலகில் தலையாயவர் சிவ. கண்ணப்பா! தமக்கென ஒரு தனி வழி வகுத்துக் கொண்டவர்; அவ்வழியில் அரசெனத் திகழும் ஆற்றலர்; எழுபத்தோர் அகவை எட்டிய பின்னும் இளைப்பில்லாத இளைஞர்; களைப்பில்லாத கடமையர்; வளர் தமிழ்ப் புதுவை வாழ் புலவர்க்கெல்லாம் வளவிழாக் கண்டவர்; பணிபோற்றிப் பாராட்டியவர்; பட்டங்கள் பயந்தவர்; வழிகாட்டும் வள்ள லாய் வாழ்ந்துவருபவர் என்க.

செந்தமிழ்த் தொண்டராகிய சிவ. கண்ணப்பா பெயரில் ''செந்தமிழ்த் தொண்டர் ஆற்றுப்படை''யைச் செய்ததில் யான் செம்மாப்படைகின்றேன்; பெருமிதங் கொள்கின்றேன்; பேறெனக் கருதுகின்றேன்.

ஆக்கமலி யிந்நூல் உருவாக ஊக்கியவரும். உறுதுணை புரிந்தவரும், என்னரும் இளவல் பேராசிரியர் மு. சாயபு மரைக்காயர் ஆவார்.

பனுவல் இதனைப் படித்துச் சுவைப்போர், செந்தமிழ்த் தொண்டர் சிவ. கண்ணப்பா, பல்லாண்டு வாழ்க பல்லாண்டு வாழ்கெனப் பறை சாற்றுக; எல்லாம் வல்ல இறையருளால் ஏந்தலிவர், வளநலம் பெற்று வாகை பெறுக. தொண்டுருவாய்த் துலங்கும் சிவ. கண்ணப்பா அவர்கள், துவளா தோங்குக, தூய புகழ் தாங்குக.

அழகாய் இந்நூலை ஆக்கித் தந்த கோமதி அச்சகத் தார்க்கும், உடனிருந்து இந்நூல் உருவாக ஒத்துழைத்த என் அருமை மருமகன் பேராசிரியர் மு. இ. அகமது மரைக்காயர்க்கும் நன்றி உரியதாக.

67, காசியார் வீதி
காரைக்கால்-609602

அன்பன்
காரை-இறையடியான்

செந்தமிழ்த் தொண்டர் ஆற்றுப்படை

இறையரு ளீந்த இன்றமிழ் போற்றும்
நிறைமனம் பெற்றார் நெடுந்துய ரற்றார்;
முழுமை மொழியாய் முதன்மை மொழியாய்
விழுமிய மொழியாய் வியனிலம் முற்றும்
அமைமொழிக் கெல்லாம் அன்னை யான
தமிழின் மாட்சி தளரா ஆட்சி!
தாய்மை மொழியாய்த் தூய்மை மொழியாய்,
வாய்மை மொழியாய் ஆய்மை மொழியாய்,
வளமைத் தோற்றமும் இளமை யேற்றமும்,
களம்பல கண்டும் கலங்கா வூற்றமும்,

இலக்கியச் செறிவும் இலக்கண வறிவும்
துலக்கி யின்றும் தொடர்நடை பயிலும்
தேனே தமிழே; தெளிவின் தெளிவே,
ஊனே உயிரே; உலக வுயிர்ப்பே;
உன்றன் பெருமை ஒடுங்குவ தில்லை;
குன்றாய் ஓங்கும் கொற்றமும் தாங்கும்!
இத்தகு சிறப்பெலாம் இயற்கையி லியைந்த
முத்தமிழ் கற்ற முதுபெரும் புலவ!
தளர்ச்சி நடையொடு தமிழகத் திருந்து
வளர்ச்சி கருதி வந்தனை என்முன்!

புதுவை மாநிலம் புரட்சி மாநிலம்
கதவைத் திறந்து களிப்பருள் பூநிலம்!
கடைக்கண் காட்டிக் கடமையை யூட்டி
அடைக்கல மளிக்கும் அழகிய தேனிலம்!
துரத்தப் பட்டார் தூய்மை யறிந்து
பொருத்த மான புகலிட மாகி
வந்தவர் தம்மை வளர்க்க முந்தல்
செந்தமிழ்ப் புதுவையின் செயற்பா டாகும்!
விடுதலைப் பாவலன் வியன்றமிழ்ப் பாரதி
அடலே றாக ஆற்றல் பெற்றிடத்

தங்கிடம் தந்த தமிழ்வளர் புதுவையின்
பொங்குணர் வெல்லாம் பொதுமை யொளியாம்!
கரந்து வாழக் கடந்து வந்த
அரவிந் தர்க்கும் அடைக்கலம் தந்து,
சீரகம் வழங்கிச் சிறந்தார் இவரெனப்
பாரகம் போற்றப் பண்ணிய புதுவை!
போந்தவர்க் கெல்லாம் புதுவை மாநிலம்
ஏந்து நலமளி எழிலார் பூவகம்!
தலைநகர் புதுவை தாங்குமிச் சிறப்பைக்
கலைவளர்க் காரையும் காட்டுதல் காண்க.

இருள்நிலை போக்கும் இலங்கொளி யூற்றாய்
அருள்நிலை வழங்கும் அருங்கா ரைக்கால்!
செந்தமிழ் மொழியும் சிவனிய வழியும்
முந்தைய நிலைபெற முறைப்பாக் கலையால்
இனிதாம் புரட்சி இயக்கி வென்றார்

புனித வதியெனும் புலமைச் செல்வி!
பனிமலை வாழும் பைந்தமிழ்ச் சிவனைக்
கனியருள் மூலம் கனிய வைத்ததால்
அம்மை யென்றே அரனாங் குரைக்க
செம்மை பெற்றார் செந்தமிழ்ச் செல்வி!

இயலிசை வல்ல இறையடி யாராய்க்
கயமையைக் கொன்றார் காரைக்கா லம்மை!
கண்ணுதற் கடவுள் கலையொளிச் சாற்றிப்
பண்ணிசை பொழிந்தார் பைந்தமிழ்ச் செல்வி!
இந்நிலைச் செய்தி இசுலாம் தந்த
செந்நிலைப் பெரியார் செம்மல் மசுத்தான்
பொன்வர லாற்றிலும் பூத்தல் காண்க;
இன்மொழி பொங்கிய இறைநெறி மசுத்தான்
புகழ்நபி குலவழிப் புகாரா தோன்றி
அகத்தொளி பெற்றே அவனியைச் சுற்றி,

எவ்வூர் வரினும் ஏலா ராகிச்
செவ்வூர் காரையைச் சிறப்பெனக் கொண்டார்!
மக்கள் பொதுக்குரு மசுத்தான் சாகிபு;
தக்கார் இவரைத் தமிழ்நூல் வாழ்த்தும்!
நாடி வந்த நம்பி இவரையும்
பாடிப் போற்றும் பண்பொளிப் பாங்கு
புதுவை காரையின் பொதுக்குண மென்று
மதுகை யோடு மனத்தில் நிறுத்துக!
வறுமை நீங்க வளமை தாங்கப்
பொறுமை யோடு புலமை நூல்பல

யாத்து யாத்து யாக்கை இளைத்து
மூத்து மூத்து முற்றுடல் களைத்துப்
பரிசில் பெறற்குப் பாவளங் காட்ட
அரிசி லாறாம் அணிமக ளாடும்
கயலோ வெழுந்து களிப்புடன் தாளம்
வயல்நீ ருள்ளும் வழங்கித் துள்ளும்;
ஆழி நெளிசுருள் அலைக்கண மெல்லாம்
வாழி யென்னும்; வருக வென்னும்;
சீரைக் காலுஞ் செழுமை நகராம்
காரைக் காலைக் கண்டனை களித்தே!

விலையோ மலையென வியன்பொரு ளூற்ற
நிலையைப் பற்றி நிரம்பக் கூறி
வருந்தும் நின்துயர் வறுமைப் பிணிக்கு
மருந்து தருவேன்; அருந்தி மகிழ்க!
அம்மருந் துண்டால் அனல்மிடி சாகும்;
செம்மை யாகும்; சிறுமை போகும்;
கல்வி கலைவளக் கவினார் பாவல,
செல்வம் ஓங்கும்; செழிப்புளம் தாங்கும்;
தளருடல் தழைக்கும்; தாழ்வினை யொழிக்கும்;
வளநிலை காண வந்தனை கேண்மின்!

நல்லா றதனில் நடந்தார்க் கெல்லாம்.
பொல்லாங் கில்லை; பொங்கும் பொருளே!
என்மொழி கேட்பின் ஏகும் துன்பம்;
நன்மொழி யஃது நல்கும் இன்பம்;
காரை வந்த கவின்றமிழ்ப் புலவ,
சீரைச் சொல்வேன்; சிறக்கச் சென்மின்!

சேர னில்லாச் சிறுமைப் பொழுதில்
யாரைக் காண்பேன் யானெனக் கலங்கேல்;
சோழ னிலதால் சோர்ந்தே னென்று
தாழலுந் தவறு தனித்தமிழ்ச் செல்வ!

பாண்டிய னிலதால் பைந்தமிழ்ப் பெருமை
மாண்டிடு மென்றா மனத்திற் கொண்டாய்?
கடையெழு வள்ளல் கடந்தன ரேனும்
நடைமுறை வண்ணம் நலிந்திட வில்லை!
பாரகம் போற்றும் பைந்தமிழ்ப் புதுவையில்
சீரகம் பெற்ற செந்தமிழ் வள்ளல்
ஒருவ னுள்ளான் ஒப்பில னாகத்
திருவ னவனே தீந்தமிழ் காப்போன்!
'சிவகுரு நாதன்' செல்ல மகனவன்;
தவமக ளொத்த தாயாம் நல்ல

'ஆதி லட்சுமி' அருமைச் செல்வன்;
ஓதும் தமிழை உயர்த்தும் வள்ளல்!
மதுரை யென்றால் மணித்தமிழ் எண்ணம்
பொதுவாய் நெஞ்சில் பொங்குங் கண்டாய்!
புதுவை யென்றால் புதுமை புரட்சி
பொதுளும் தமிழ்மை பூக்குங் கண்டாய்!
தோற்றம் மதுரையில் தொடங்கி னாலும்
ஏற்ற வாழ்வெலாம் எழிலார் புதுவையாய்த்
தவமுஞ் செல்வன் தமிழ்மை காப்போன்
"சிவ. கண் ணப்பா" செம்ம லாவன்!

கரிய வண்ணன்; கனிவில் அண்ணன்;
அரிய எண்ணன்; அன்பில் திண்ணன்;
உயர்ந்த தோற்றம்; உள்ளமும் ஏற்றம்;
அயர்ந்திடா ஆற்றல்; அருள்வினை யூற்றம்;
உள்ளம் போலிவன் உடுக்கையு மொளியாய்
வெள்ளை யாக விளங்குங் கண்டாய்!
கண்ணிணை யாண்டுங் கன்னித் தமிழின்
வண்ணந் தன்னை வரவேற் றிருக்கும்!
செவியிணை ஞான்றும் செந்தமிழ்ப் பாவின்
கவினை யீர்த்துக் கடத்தும் நெஞ்சுள்!
நெற்றிப் பரப்போ வெற்றி காட்டும்,
முற்றும் தமிழென மூச்சுடை மூக்கு;

ஆக்கும் வினையை அறைந்திடும் நாக்கு;
காக்குஞ் செயற்கே கையெனும் போக்கு;
காலிணை யென்றுங் கடனாற் றற்கே
கால மெல்லாங் களைப்பறப் போகும்;
தண்டமிழ்த் தாய்க்குத் தலைமை தரற்கே
தொண்டினை யாற்றுந் தூய வள்ளல்!
கண்ணப் பாவெனுங் கவின்பெயர்க் கேற்ப
வண்ணத் தமிழ்க்கு வளமை சேர்த்துப்
பார்த்து மகிழும் பண்புடன் பிறரையும்
ஆர்த்து மகிழ அழைக்குந் தொண்டன்!

வேறுபட் டிருக்கும் வியன்றமிழ்ப் புலவரை
மாறு பாடற மன்றங் கண்டே
ஒன்றிடக் கூட்டும் ஒப்பில் தலைவன்!
வென்றி யிதனில் வியப்பார் கலைஞன்!

சாதி யென்னுஞ் சழக்கால் தமிழ்க்குத்
தீதே யென்ற தெளிவுடன் நாளும்
ஒருகுல நோக்கில் ஒளித்தமிழ்ப் புலவர்
பெருநலங் காணப் பெரிதும் உழைப்போன்!
மதப்பகை காட்டா மனத்தொளி பெற்றுப்
பொதுமைத் தமிழ்ப்பணி பொங்கும் புரவலன்;

வேற்றுமை யில்லா வியன்றமிழ்ப் பணியில்
ஆற்றல் மிக்கோன்; போற்றொளித் தக்கோன்;
இயக்க கட்சி மயக்க மின்றி
வியக்கும் வகையில் விளங்கும் வள்ளல்!
தமிழெனப் போவார் தமக்கெல்லாம் இம்மகன்
அமிழ்த வூற்றாய் ஆக்கஞ் சேர்ப்பவன்;
குறைந்த செல்வக் குரிசிலா யிருந்தும்
நிறைந்த மனத்தால் நிலைபுகழ் பெற்று
வள்ளலர் தம்மில் வான்புகழ்க் கிவனென
விள்ளும் மாண்பில் வீறாய் விளங்குவோன்!

அருளுறப் பெற்ற ஆற்றல ரெல்லாம்
பொருளுறப் பூப்பர்; பொதுமையைக் காப்பர்;
இன்னவர் தம்மில் இரும்புகழ் கொண்ட
மன்னவ னாவன் மணிக்கண் ணப்பா!
ஆட்சிய ரேனும் அரும்பொருள் மிகுந்த
மாட்சிய ரேனும் மலர் தொழில் வணிக
நீட்சிய ரேனும் நிலவு பிறதுறைக்
காட்சிய ரேனுங் கண்ணப் பாவின்
அன்புப் பிடிக்குள் அகப்பட் டெழுந்தே
இன்பம் பயக்கும் ஈகைய ராவர்!

திட்பச் செறிவுத் திருவின ரவனின்
நட்புக் கிணங்கி நல்குவர் நற்கொடை!
எத்துறை யாளரும் எழுந்து வந்து
முத்தமி ழூற்றில் மூழ்கி யின்ப
உள்ளத் துடனே உறுபொருள் வழங்கும்
வள்ள லாகி வதிந்து மகிழ்வர்!
எண்ணப் படியே இயைந்த பொருட்குவை
கண்ணப் பாவிடங் கண்ணிய மாக
நிறையுற வந்ததும் நிகழும் கொடைமழை
கறையறப் பொழிந்து கணக்கொளி வெள்ளைக்

காட்சியைக் காட்டும்; மாட்சியைக் கூட்டும்.
பூவெலாந் தேனீ பொலிதேன் செறித்துக்
காவற் கூட்டில் களிப்புடன் வைத்து
மாந்தர்க் கீயும் மாட்சி போலக்
காந்த ஈர்ப்புக் கண்ணப் பாவும்
வறுமைப் புலவர் வளம்பெற வழங்கிப்
பொறுமை யோடு புன்னகை பூப்பான்!
பிறர்துயர் போக்கப் பிறவி யெடுத்தோன்
அறத்திறம் அளப்பின் ஆழி யம்மா!
தனக்கென வாழாத் தக்கோன் பெற்றி

மனத்தொளி காட்டும் மாண்பார் வெற்றி!
புலமை யேறாய்ப் பொலிந்தும் இன்னோன்
புலவர் தமக்கோர் புரவல னாகப்
புரட்சி புரிந்து புலவர் தம்மின்
வரட்சி போக்க வள்ள லானான்;

பக்கம் வந்திடும் பாக்கலைப் புலவனின்
சிக்கலை யோட்டிச் செல்வம் தந்து
தக்க வள்ளலாய்த் தவழ்கண் ணப்பா,
மக்கள் தலைவன்; மதித்தே னப்பா!
விந்தை மகனிவன் வீற்றினை யின்னுஞ்

சிந்துவன் கேண்மின் செந்தமிழ்ப் புலவ!
எழுபத் தொன்றை ஏந்தும் அகவை
எழுந்து மின்னோன் இன்றும் இளைஞனே!
கூனிக் குறுகாக் கொழுமை யுடலுடன்
தேனீப் போலத் திருப்பணி செய்வோன்!
'இளமை தன்னில் இன்னுடல் காத்தோன்
வளமை யோடு வதிவான் முதிர்வில்'
என்ற சொற்கோர் எடுத்துக் காட்டாய்
வென்றவன் யாராம்? விள்கண் ணப்பா!
விளையாட் டென்றால் வீறி யெழுவான்;

களைப்பற ஆடிக் களித்துக் குதிப்பான்!
வண்ணப் பட்டம் வானில் விட்டே
எண்ணம் போல எழிலா யஃது
பறக்கும் போது பார்த்து மகிழ்வான்;
சிறக்கும் இன்பில் சிலிர்த்து நெகிழ்வான்;
வேக மாக விட்ட பம்பரம்
வாகாய்ச் சுற்றி வாகை காணலில்
வீர னாக விளங்கி நின்றோன்
ஈர நெஞ்சன் இனியகண் ணப்பா!
சில்லாட் டத்தொடு பல்லாட் டங்கள்

வெல்லுந் திறத்தில் விளையாட் டரசன்!
பந்தாட் டங்கள் பலவகை தனிலும்
முந்தாட் டத்தை முறையே யாடிச்
சூழ்ந்தோர் வாழ்த்தைச் சொல்ல வைத்து
வீழ்ந்தி டாமல் வெற்றி காண்பான்;
பூப்பந் தாட்டப் போக்கிலு மிவனே
மூப்பேந் தாட்ட முதல்வனாய் வருவன்;
காற்பந் தாட்டங் காணப் படினும்
தோற்ப தில்லை; துவள்வ தில்லை;
கூடைப் பந்திலுங் குறையே யின்றி

ஆடி வெல்வான் அருங்கண் ணப்பா!
சதுரங் கத்தும் சாலத் திறமை
பொதுள நின்றோன் புகழ்க்கண் ணப்பா!
இலங்கை யன்றி இந்திய மாநில
இலங்கிட மெல்லாம் இன்னோன் சென்று
சால வென்றான் சதுரங் கத்தில்!
மேலும் இவன்திறம் மிகுந்தெழும் கேண்மின்!
உடல்வளர் பயிற்சியில் உயர்ந்தது போலச்
சுடர்தமிழ்க் கல்வியில் சோர்வில னாகி
ஆற்றல் பெற்ற அறிஞ னானான்;

ஏற்ற முற்ற எழுத்து வேந்தாய்ப்
பற்பல இதழ்களில் பைந்தமிழ்த் திறத்தைப்
பொற்புடன் காட்டப் புகழ்மிகப் பெற்றான்;
அவைநிலை யறிந்தே அனைவரும் போற்றச்
சுவையுடன் தருவன் சொற்பொழி வின்பம்!

பட்டிமன் றத்தும் பகலார் தலைவனாய்ச்
சட்டம் பேசிச் சால்பு நிறுவன்!
நுணுக்கத் திறத்துடன் *நூலும் நான்கு
மணக்கத் தந்தான் மகிழ்ந்திட மக்கள்!
அந்தமிழ் கற்றே அகத்தொளி பெற்று

முந்தை இலத்தீன் முறையாய்ப் பயின்றான்
பிரெஞ்சு மொழியிலும் பெருமை யடைந்தான்;
விரிந்த கல்வி விளக்காய்ச் சுடர்ந்தான்!
இல்லற வாழ்விலும் நல்லறங் காட்டி
வல்ல மகனாய் வாழ்ந்து வருவோன்;
தூய மனைவி தாயா ரம்மாள்
நேயத் துணையுடன் நெஞ்சுடல் நெருங்கி
அந்தமிழ்க் காப்பியம் ஐந்தினைப் போலத்
தந்தனன் சேய்களைத் தக்கவர் வாழ்த்த!
பண்ணார் சிலம்பின் பற்றி னாலே

'கண்ணகி மாதவி' கவிபெயர் தாங்க
இருமகள் தம்மை ஈந்தான் உவந்து
பெருமகன் அன்று பீடாய் நன்று!
'வீணைதீர் குமரன்' வியன்பெயர் வைத்து
வனப்பார் மகனை வளமுடன் வளர்த்தோன்;
உளமார் சிலம்பின் உணர்வி னாலே
'இளங்கோ வென்றான் இன்னொரு மகனை!

---

* நான்கு நூல் : 1. 30 நாட்களில் பிரெஞ்சு மொழி 2 மாணவர் இலக்கணம் 3 சாதிப்பற்று 4 கவிஞர் சவராயலு.

அன்னையின் பெயராம் 'ஆதி லட்சுமி'
இன்னொரு மகட்கே இட்டு மகிழ்ந்தான்;
பெயர்வளந் தனிலும் பெரியனாய் நின்ற
நயமிதைச் சற்று நாம்சிந் தித்தால்
தாய்மைப் பற்றொளித் தூய னிவனின்
வாய்மை வாழ்வின் வளங்கள் இவையாம்!
நிரல்படச் சொன்ன நிறைவினைக் கேட்டு
மரமென நின்று மலைத்திடும் புலவ,
வளக்கண் ணப்பா வாழ்வினைப் பற்றி
விளம்புவன் இன்னும் வியப்பே விரியும்!
உள்ளச் செல்வ உயிர்த்தமி ழோடு
பிள்ளைச் செல்வப் பேறும் பெற்றான்!
பல்கலை வல்லோன்; பணியில் நல்லோன்;
புலமைச் சொல்லோன்; புகழில் எல்லோன்;
அமைதி வழங்கி அகத்தொளி யேற்றும்
சமயக் கலையிலும் சான்றோ னாவன்;
முன்னிலைத் தெளிவை முறையுடன் விளக்கிப்
பின்னிலை கண்ட பிறழ்ச்சியும் துலக்கி
வருங்கா லத்தில் வனப்புடன் வாழப்
பெருஞ்செய லூக்கும் பெற்றிய தான
வரலா றென்னும் வாகைக் கலையையும்
உரமுடன் தேர்ந்த உயர்ந்தோ னாவன்!
விளையாட் டென்னும் வியன்கலை யாவையும்
திளைத்திட வூக்கித் திறமையைப் பெருக்குவன்;
இலக்கியத் துறையெலாம் இவனைக் கொண்டே
துலக்கப் படுவது தொடர்நிலை என்க!

மாசில் கல்வியின் மதுகை பெற்றதால்
ஆசா னாக அரும்பணி பற்பல
புதுவை மாநகர் பூங்கா ரைக்கால்
வதிந்திடு பள்ளி வகுப்பறை தன்னில்
கதிராய்க் கான்று கற்போர் நெஞ்சில்
பதித்தார் கல்விப் பண்பொளி தன்னை!
மாணவர் தம்மின் மனநிலைக் கேற்பப்

பேணருங் கல்விப் பெற்றிமை யெல்லாம்
பயிற்சி மூலம் பயன்பெற வைத்து
முயற்சி யாலே முதன்மை சேர்த்து
வளமா ணவர்தம் வாழ்வு வெல்ல
உளமார் கல்வி உயிர்ப்பைத் தந்தான்!
இன்னவன் மாணவர் இலங்கு துறையெலாம்
முன்னணி மாந்தர் முதன்மை கண்டு
சிறக்க வாழுஞ் செப்பந் தன்னை
மறக்க மாட்டார் மனத்தவர் எவரும்.
சிவ. கண் ணப்பா சிறப்பை மேலும்

செவியுறப் பெறுக செம்மொழிப் புலவ!
மேவு வ.உ.சி. மேனிலைப் பள்ளி
ஆவ தற்குமுன் அமைந்த பள்ளியில்
பீடார் ஆசான் பெரும்பணி தொடங்கி
ஈடில் லாமல் இயங்கினன் இம்மகன்!
கவினார் பிரெஞ்சுக் கல்லூ ரியிலும்
தவறில் லாமல் தந்தான் பணியை!

கலைக்கல் லூரியில் கனித்தமிழ்ப் பிரிவில்
நிலைசேர் புகழை நிறுவி வளர்ந்தான்;
இறைப்பணிக் காக இந்நா டுற்று

முறையணித் தமிழை முயன்று கற்றுத்
தம்பெயர்த் தள்ளித் தமிழ்ப்பெயர் தாங்கி
அம்புவி போற்றும் அந்தமிழ்ப் புலவர்
வீரமா முனிவர் வியன்பெய ராலே
சீருடன் விளங்கிச் செயற்படும் அந்த
நடுநிலைப் பள்ளியில் நறுந்தமிழ் தந்தான்
கெடுநிலை யில்லாக் கேண்மை யாசான்!
காரைக் காலிலுங் கல்விப் பணியாஞ்
சீரை யீந்து செழுமை சேர்த்தான்;
அரும்பு மாணவர் விரும்பு வகையில்

குரும்ப கரத்தில் கரும்புக் கல்வியை
ஈந்து நின்றான்; இருளை வென்றான்;
ஏந்த லிவனின் ஏற்றம் பெரிதே!
இன்னவன் மேலும் இனிய காரையில்
†மன்னவன் தொடக்க மாணார் பள்ளியில்
ஆசான் பணியை ஆசற வாற்றி
மாசில் புகழை மருவிக் கொண்டான்!
என்றுடன் பல்லோர் எழிற்றமிழ் பெற்றது
கன்னற் புதினக் கல்லூ ரியில்தான்!
புதுவை வாழும் புலவ ரெல்லாம்

---

† க. மன்னவன் தொடக்கப் பள்ளி.

மதுவை காட்டிய மாண்கல் லூரி!
கவின்புகழ்ப் புதினக் கல்லூ ரியிலும்
சிவ- கண் ணப்பா செந்தமிழ்த் தேனை
மாந்திட மாணவர் ஏந்தித் தந்த
ஏந்த லாகி ஏற்றங் கொண்டான்!
ஆற்றல் மிகுந்த ஆசான் பணியில்
தேற்றம் பெற்ற திருப்பணி போற்றிப்
பெருமை யோடு பிரெஞ்சியர் அரசும்,
அருமைப் புதுவை அரசு மிவற்கு
வல்ல விருதுகள் வழங்கி மகிழ்ந்து

நல்லா னிவனை நனிமிகப் போற்றின!
செம்மைக் கல்வி செழும்பணி மேன்மை
இம்மட் டென்றே எண்ணங் கொள்ளேல்;
மாணவர்க் காக மணித்தமிழ் மன்றம்
பேணக் கண்ட பெருமகன் இவனே!
திட்பக் கல்வி தெளிவுமிக் கோங்க
நுட்ப மதிபெற நூல்நிலை யத்தை
விளங்கச் செய்து வீறு கொண்டோன்
களங்க மில்லாக் கண்ணப் பாவே!
அகத்தொளி பெற்றிட அருமை மாணவர்

மகிழுலாக் கண்ட மாண்பனு மிவனே!
தூய தமிழில் துறைபல வல்ல
நேயர் தம்மின் நெடுமழைத் தேனை,
ஆவலாய் மாணவர் அருந்தி யுயரக்
காவல் புரிந்தோன் கண்ணப் பாவே!

செந்தமிழ்ப் பெருமையைச் சேய்மொழி பிரெஞ்சால்
சிந்தி யொருவர் செவ்வுரை யாற்ற
ஆவன செய்த அருமகன் இவனை
யாவரும் போற்றுவர்; யாண்டும் போற்றுவர்!
வீரமா முனிவர் விரிவர லாற்றை

ஆர மதியுடை ஆசா னான
சீரார் செயல்திறம் செறிஅம் பாடி
நாரா யணனை நனிமிக வூக்கி
ஆங்கி லத்தில் ஆய்வுடன் எழுதப்
பாங்காய்த் தூண்டிய பணியன் இவனே!
பொலிவு மிகுந்த புதுவை மண்ணில்
பொலிவுறு தமிழ்க்கு மீட்சி காணக்
கண்ணியத் தோடு கண்ணப் பாவே
திண்ணி னாகத் திருப்பணி செய்தான்!
கற்றார் தம்மில் கழகங் கண்டோர்

நற்றாய் தமிழை நகர்த்தி விட்டுப்
பிறமொழி பிரெஞ்சுப் பேரா சான்கள்
திறமுடன் மன்றைத் திகழ விட்டனர்!
அந்தமி ழாசான் அணியினர் தமக்கும்
முந்து டணிக்கு முறையே மன்றம்
வேண்டுமென் றார்த்து வெற்றியுங் கண்டவன்
ஆண்டெவ னென்றால் அவன்கண் ணப்பா!
பதினே ழகவை பற்றிய இளமையில்
மதித்தழ்க் காக மன்றங் கண்டவன்!
அன்பு நிலைக்களன் அமைப்பை முதலில்

வன்பாய் அமைத்து வளர்த்தான் தமிழே!
பொற்பொளி யாசான் பூங்கண் ணப்பா!
பற்பல மன்றமும் பாங்காய்ப் படைத்து
நற்பணி மிகமிக நாளும் வளர்த்து
கற்போர் குழுவைக் கணக்கில ராக்கினன்!
புதுவை மண்ணில் புகழுடன் பொலியும்
மதுகை வாய்ந்த மன்ற மான
தமிழ்ச்சங் கத்துத் தலைவ னாக
அமிழ்தப் பணிகள் அழகா யாற்றி
மக்கள் நெஞ்சில் மலர்ந்தான்; மணந்தான்

தக்கோ னான தமிழ்க்கண் ணப்பா!
இளங்கோ வடிகள் இனிய மன்றிலும்
வளங்கள் பண்ணி வளர்த்தான் பைந்தமிழ்.
கலையியல் பிரெஞ்சுக் கழகமும் கண்டு
நிலையியல் நட்பை நெடிது வளர்ப்போன்;
மதிச்சது ரங்கம் மலர்ச்சி கொண்டு
வதிந்து நிற்க வளர்ச்சி காண
மாநில அளவில் மன்றங் கண்டோன்
பூநிலம் போற்றும் புகழ்க்கண் ணப்பா
* ஓங்கா ரத்தை யுணர்த்தும் மன்றிலும்

பாங்காய்த் தொடர்ந்து பணிகள் செய்வோன்;
அரசுத் தொடர்புடை அனைத்துக் குழுவிலும்
கரிசி லுறுப்பாய்க் கவின்பணி சிறப்பாய்
ஆற்றி யாற்றி அரும்புகழ் கொண்டோன்;
ஏற்றப் பணிகளை ஏழிலாய்ச் செய்வோன்;
வியன்புகழ் மாந்தர் விழாக்குழு வெல்லாம்
நயனுடன் நடக்க நாளு முழைத்தோன்;
ஆற்றலர் பாரதி அரும்நூற் றாண்டு

---

* ஓங்கார ஆன்மீகச் சங்கம்.

ஏற்றக் குழுவிலும் இவன்பணி பெரிதே
சார்தமிழ் பாவலர் சவரா யலுக்கும்

சீர்நூற் றைம்பதாம் செவ்விழாக் குழுவிலும்
சொல்லத் தக்க சுடர்மிகு பணிகளில்
வல்லகண் ணப்பா வாகை நிகழ்த்தினன்;
தந்தையின் நண்பர் தமிழ்ப்பா வேந்தர்
விந்தைப் பெருமை விளங்க விழாக்கள்
நினைவேந் தலெனும் நிகழ்ச்சி களாக
வனப்புடன் செய்யும் வாகையன் இவனே!
ஆண்டு தோறும் அவ்விழா நடத்தித்
தூண்டித் தமிழ்க்குத் தொண்டு புரிவோன்!
ஆசிரி யர்க்காம் அணிநலக் குழுவிலும்

மாசிலா இம்மகன் மணிப்பெய ருண்டு!
முதியோர் கல்வி முறைக்குழு தனிலும்
மதிப்புடன் இவன்பெயர் மலர்ச்சி யுண்டே!
எக்குழு புதுவையில் ஏற்பட் டாலும்
அக்குழு சிறக்க அரும்பணி தருபவன்
தொண்டில் பழுத்த தூய னான
கண்டு நிகர்த்த கண்ணப் பாவே!
அமைப்புகள் தோறும் ஆற்றல் பணியை
இமைப்பிலே செய்யும் இம்மகன் பெருமை
சாலப் பெரிதெனச் சாற்றவேண் டுங்கொல்?

காலப் பணியுயிர் கண்ணப் பாவே
துறைபல வற்றில் தொண்டுக ளாற்றி
நிறைநிலை மாந்தராய் நிலவு வார்க்கும்
புலர்மதி பொங்கு புலவர் தமக்கும்
மலர்க்குழு வைத்து மாண்செய விரும்பின்
அக்குழுப் பணிக்கோ ஆக்கஞ் சேர்ப்போன்,
சிக்கல் வருமேல் சிறப்புடன் தீர்ப்போன்;

மணக்கும் மலரை மன்றில் வைத்துக்
கணக்குடன் தருவோன் கண்ணப் பாவே!
எப்பணி தரினும் ஏற்றத் தோடு

செப்ப மாகச் செய்து முடிப்போன்
கண்ணப் பாவெனக் கருதுக புலவ,
எண்ணந் தளரேல் ஏற்றங் கொண்மின்;
விழிப்புணர் வளிப்பதில் வேந்தாய் விளங்கும்
செழிப்பொளித் தொண்டுச் செம்ம லான
கடமை யூற்றாங் கண்ணப் பாவைக்
கடந்து சென்று காணும் முன்னர்
அன்னவன் பற்றிய அருஞ்செய லெல்லாம்
உன்னி யுணரல் உயர்வாங் கண்டாய்!
ஆற்றல் புலவ, அருந்துக தேநீர்;

ஊற்றாய்ச் செய்தி உரைப்பேன் ஏற்க!
செந்தமிழ்த் தொண்டன் சிவ. கண்ணப்பா
அந்தமிழ்ப் பற்றை அடைந்த நிலையைப்
பகர்வேன் கேளாய் பைந்தமிழ்ப் புலவ!
அகத்தொளி கண்ட அருந்தமிழ்ப் பெரியார்
துலங்கு திரு. வி. க தூய நூலாம்
“இலங்கைச் செலவே” இன்னவன் தனக்குச்
செந்தமிழ்ப் பற்றைச் செறியத் தந்து
விந்தை மகனாய் விளங்க வைத்தது!
தென்றல் திரு. வி. க திருமக னுடனே

என்றும் உறவுடன் ஏற்றம் பெற்றவன்;
செந்தமிழ் வல்ல சேதுப்பிள்ளை
முந்தொளி முனைவர் மு. வ., தெ. பொ. மீ
இன்னவ ரிடத்தெலாம் இன்னுற வெய்தி
அன்னைத் தமிழில் அரும்பற் றுற்றான்!
செங்கோல் இதழால் செம்மை கூறித்

தங்கோள் நிறுவத் தமிழர சென்னும்
கழகங் கண்டு கலைத்துறை யாளரைக்
குழுவாய்க் கொண்டு குறையறப் பேசிய
சிலம்புச் செல்வரின் சீரணி சேர்ந்து

நலம்பல பெற்றான் நம்கண் ணப்பா!
செந்தமிழ்த் தொண்டைச் சிறக்கச் செய்ய
இந்தக் கழகமும் இவனை யூக்கிக்
கிளர்ச்சி மூலம் கீழ்மை தவிர்த்தது;
வளர்ச்சி மூலம் வாழ்மை தந்தது!
முப்பால் முதிர்ச்சி முறைமக னிவனின்
செப்பந் தன்னைச் செப்பின் பெரிதே!
அறச்செயல் பலப்பல ஆற்றின தாலே
குறள்நெறி மன்றம் கூர்த்தெ ழுந்து
பணிமகன் தனக்குப் பாராட் டளித்து

மணிவிழா நடத்தி மாண்பைப் பெற்றது;
"செந்தமிழ்த் தொண்ட"ரென் செவ்விய பட்டம்
தந்ததும் இந்தத் தமிழ்மன் றந்தான்!
சிவநெறி போற்றிச் செயற்பட் டுயர்ந்த
சிவ. கண் ணப்பா செம்மல் தனக்குத்
தவநெறி பயிலத் தகுகுரு வாலே
"சிவநெறிச் செல்வர்' சீரிய பட்டமும்
வந்திவன் பெருமையை வளர்த்தது கண்டாய்!
செந்தமிழ்த் தொண்டன் செந்நிலை கொண்டான்!
அறமுறை தாவீது அன்னு சாமி

நெறிமுறை யோடு நீர்மைத் தமிழ்க்கே
ஓயாப் பணிதரும் ஒண்மகன் தன்னை
நேய முடனே நினைத்துப் பார்த்துத்
"தமிழ்முனி வரெனும்" தலைமைப் பட்டம்
அமிழ்தாய் வழங்கி அகம்மகிழ்ந் தார்கள்!

வண்ணத் தமிழ்க்கென வாழு கின்ற
எண்ணங் கொண்ட ஏந்த லிவனை
தரஞ்சேர் புதுவைத் தமிழ்ச்சங் கந்தான்
உரமுடன் உள்ளி உவகை கொண்டது;
அயர்ந்தி டாமல் அரும்பணி யாற்றும்

உயர்ந்தோ னிவற்கே ஊரைக் கூட்டித்
தலைமைப் பட்டம் ''தமிழ்மா மணியை''
நிலைக்க வைத்து நிரம்பக் களித்தது!
குறையில் லாமல் குமுகத் தொண்டிலும்
நிறையுடன் பயக்கும் நீர்மையன் ஆவன்!
செம்மைக் குரிய செந்தமிழ்த் தொண்டன்
நம்மனோர்க் கெல்லாம் நண்பன் கண்டாய்!
வளமிகு பட்டம் வழங்கப் பட்டும்
உளநிலை தன்னல ஒடுக்க மின்றிப்
பிறர்தம் பெருமையைப் பேசு தற்கும்

திறத்தர் ஓங்கத் தேற்று தற்கும்,
மற்றவர் பெற்ற மதுகை தன்னைத்
தெற்றெனப் பிறர்தாம் தெரிவ தற்கும்
வலிமை விளங்க வழிமுறை யற்று
நலிவுடன் வாடும் நல்லார் தமக்குப்
பொலிவுடன் தேர்ந்து புதுவழி காட்டி
மெலிநிலை நீக்கி மேலேற் றுதற்கும்
கால மெல்லாங் கடமையை யாற்றிக்
கோலப் புகழைக் கொண்டவன் இவனே!
பல்கலைக் கழகப் பணியினைப் போல

பல்கலை வல்லார் பரப்பைத் தேர்ந்து,
தக்கார் தம்மின் தழைப்புக் காக
மிக்க மகிழ்ந்து மேன்மை போற்றி
வழங்கிப் பட்டம் வளம்பெற வைக்கும்
ஒழுங்கு வினையை ஒப்பறச் செய்தான்!

விந்தை யென்ன வினையில் வல்லோன்
செந்தமிழ்த் தொண்டன் சிறப்போ கடலாம்!
சிதம்பர னார்க்குச் செவ்விழாக் கண்டான்;
முதியோர் பலர்க்கும் முறைவிழாக் கண்டான்;
குப்பு சாமி குணநலம் போற்றிச்

செப்புபா ராட்டைச் சிறக்கச் செய்தான்!
திருமால் மீது திருப்பற் றுடையார்
பெருந்தமிழ் தங்கு பெருமன முடையார்
குமார சாமி குரிசிலர் தம்மின்
தமிழ்ப்பணி போற்றித் தக்கார வர்க்கோ
''இலக்கணச் செம்மல்'' இன்பட் டத்தை
துலக்கி வைத்தான் தூயகண் ணப்பா!
பைந்தமிழ் பரப்பும் பண்பர் தம்மில்
நைந்திடா நெஞ்சில் நல்லுரம் பூண்டவர்;
திறநூல் பற்பல திகழத் தந்தவர்;

குறளறி ஞரெனக் கூறப் படுபவர்
'சுந்தர சண்முக' சுடரி னார்க்குச்
செந்தமிழ்க் குரிசில் செம்பட் டத்தைக்
கனிவுடன் வழங்கினன் கண்ணப் பாவே!
தனித்திறம் பெற்றவன் தமிழ்க்கண் ணப்பா!
தேனாந் தமிழைத் தெளிவுடன் புரக்கும்
சேனா பதியாஞ் செம்ம லுக்குச்
சீராம் பட்டஞ் ''செந்தமிழ்ப் புரவலர்''
ஆராய்ந் தளித்தான் அருங்கண் ணப்பா!
தாயாம் மரியொடு தூய இயேசு

நேய அடியார் நிறைமதி சேவியர்
அன்பா ரகத்தை அந்தமிழ் மீதில்
தென்பாய்ச் செலுத்திய திருப்பணி போற்றி
''அருந்தமிழ் அடிகள்'' அழகுப் பட்டம்
பெருமக னார்க்குப் பீடா யீந்து

வெற்றி கண்ட வியன்கண் ணப்பா
பற்றிப் பேசப் பலநாள் வேண்டும்!
வெள்ளை யாடை வள்ள லாகத்
துள்ளி வந்த தூயர்; எல்லா
உயிர்ப்பொருள் தமையும் உவக்கும் நேயர்;

இயங்கொளி வேந்தர் இராம லிங்கர்
மாணிலை போற்றி மகிழ்ந்த இராச
மாணிக் கனார்க்கு மதிக்கண் ணப்பா
''அருட்பா வாணர்'' அரும்பட் டத்தை
அருளினன் கேண்மின் அந்தமிழ்ப் புலவ!
இயற்கை யழகை இனிதாய்ச் சொல்லி
வயப்பட வைக்கும் வண்டமிழ்ப் பற்றும்
பேணரும் எளிமை பேசும் இனிமை
வாண ரான வாணி தாசர்
'பாவலர் மணி'யெனப் பட்டம் பெற்றார்

காவலர் எம்சிவகண்ணப் பாவால்!
விரிமதி மு. த. வேலா யுதனார்
சொரிமதி மெய்மை சுடர்த்திய வுண்மை
வரலா றாட்டும் வாகை யறிந்து
'வரலாற் றறிஞர்' வனப்புப் பட்டம்,
அன்னவர் தமக்கே அழகாய்த் தந்தான்
மின்னெனச் செயற்படும் மெய்க்கண் ணப்பா!
தீந்தமிழ்ப் பற்றும் திருமால் பற்றும்
ஏந்தொளி மாந்தர் இவரெனத் தவழ் இரா.
தேசிகம் பிள்ளை' திருப்பணி யாலெ

மாசி லாத மதிப்புக் குரிய
அரங்கப் பிள்ளை அருவர லாறு
தரங்கள் செறியத் தவழ்ந்தது மண்ணில்!

சுவையார் பிரெஞ்சில் சுடர்மதி பெற்ற
அவையோர் போற்றும் அருந்‘‘தே சிசரை
நோக்கிச் சீர்‘‘மொழி யாக்கச் செல்வர்’’
ஊக்கப் பட்டம் உவந்து தந்தான்
சிறப்பை மதிக்குஞ் செந்தமிழ்த் தொண்டன்;
மறப்பி லாத மனத்தொளி மாந்தன்!
‘தக்கநற் பொதுமை தவழ்ந்தோங் கிடலால்

மக்கள் நலங்கள் மலரு’ மென்றே
ஓயாப் பணியால் உயர்ந்து நின்று
நேயம் பெருக்கி நெடுந்தொண் டாற்றிய
செப்பப் பணிக்கோர் செம்மலாய் வாழ்ந்ததால்
‘சுப்பை யாவெனுஞ் சுடர்மக னுக்குச்
சிந்தை யுந்துஞ் செம்மாப் போடு
செந்தமிழ்த் தொண்டன் சிவ. கண் ணப்பா,
‘மக்கள் செல்வர்’ மதிப்பார் பட்டம்
தக்க விழாவில் தந்தனன் ஆய்ந்தே!
அமிழ்தத் தமிழ்மொழி ஆங்கிலம் பிரெஞ்சில்

குமிழ்போ லின்றிக் குன்றெனு மாறு
திருமுரு கனாரோ திகழ்ந்தார் புதுவை!
பெருகு தமிழ்மைப் பெற்றியர்; வெற்றியர்!
இலக்கியச் செறிவில் இவர்நிகர் இவரே!
இலக்கண வறிவில் இருபெரும் ஊற்றிவர்;
ஆய்வில் ஆழி; ஆர்ப்பிசை யருவி;
தோய்வி லாத தொடர்பணி யாளர்!
புதுவை தந்த மதியொளி யாசான்,
முனைவர் தேர்வில் மூத்து நின்றதை

அனைவரும் அறிய அருங்கண் ணப்பா
சீரார் விழாவால் செம்ம லிவர்க்குப்
பாராட் டளித்துப் பண்பொளி காட்டினன்!

என்ற னுணர்வில் என்றும் வதியும்
என்ற னாசான் ஏந்த லிவர்க்கும்
சிறப்பினைச் செய்த செந்தமிழ்த் தொண்டன்
திறப்பறி வெல்லாம் தீந்தமிழ்த் தொண்டே!
சீருக் கத்தைச் சிந்தை கொண்ட
பாருக் கென்னும் பண்பன்; என்றன்
காரைக் காலில் கவினாய்த் தோன்றிச்

சீரைப் பெற்றான் செந்தமிழ்ப் புதுவையில்
பார்த்தார் தம்மை ஈர்த்திடும் புன்னகை
சீர்த்த மொழியால் செம்மனங் கவரல்
ஆய கலைகளால் அரசியல் வெற்றியை
நேயன் பெற்றான்; நெடும்புக ழுற்றான்!
இலக்கிய ஆர்வால் இன்பணி சிலவே
துலக்கிய பாருக் தொண்டைப் போற்றிப்
பாராட் டோடு பட்டம் வழங்கச்
சீராய் நினைத்தான் சிவ. கண் ணப்பா!
இனிய பட்டம் ''இலக்கியக் காவலர்''

கனிந்து பிறந்தது களித்தான் பாருக்!
பொங்கு நலஞ்சால் புதுவை மண்ணில்
கங்குல் மடமறக் கல்வி பரப்பும்
பல்கலைக் கழகப் பணியாய் குழுவில்
வெல்கென விளங்கும் வியனுறுப் பிவனே!
வானொலி நிலைய வளர்மதிக் குழுவிலும்
கோனெனத் துலங்கும் குரிசி லிவனே!
குன்றிய வளர்ச்சிக் குறுமனத் தார்கள்
நன்று பெறற்கென நடந்த மனையகம்
இனிய செயலனாய் இருநான் காண்டுகள்

வினையொளி பாய்ச்சிய விறலனு மிவனே!
ஒளிப்பணி தன்னில் உள்நா டன்றி

வெளிநா டுற்றும் வியன்பணி யாற்றிச்
சிறப்பொடு திரும்பிய செந்தமிழ்த் தொண்டனின்
திறத்தினைக் கேட்க தீந்தமிழ்ப் புலவ!
சிங்கை-ம லேசியா சீரார் பிரெஞ்சகம்
இங்கிலாந் துடனே இனிய செனிவா
போய்நலஞ் செய்த புனித னிவனின்
தாய்த்தமிழ்ப் பற்றோ தலைமைத் தாகும்!
பந்தென வுந்திப் பயணஞ் சென்றும்

செந்தமிழ்த் தொண்டன் செயலாற் றினனே!
பாவினைச் சுவைக்கும் பைந்தமிழ்த் தேனீ
கோவிந்த சாமி குறுமன மில்லார்;
இசையி லார்வம் இருக்கு மிவரோ
அசைவ தெல்லாம் அந்தமிழ்க் கேயாம்!
செந்தமிழ்த் தொண்டன் செயற்பா டோங்கத்
தந்து புரப்பார் தகை-ந. கோ. வாம்!
செய்யுங் கொடையால் ''செந்தமிழ்ப் புரவலர்''
உய்யொளிப் பட்டம் உயர்ந்தா ரிவர்க்குத்
தந்து களித்தான் தமிழ்க்கண் ணப்பா!

இந்த நிலையில் இலங்கு மிருவராய்த்
துணிநல வணிகத் தூய ரான
அணித்தமி ழன்பர் அளிப்பொளி யாம்—'வேல்
சொக்க நாதர்' சுடர்மக னோடு
தக்க—வி. முத்து சரக்குந் துரிமையர்
'புரவலர்' இவர்கள் புரிமின் என்றே
அவையில் இவர்தம் அருஞ்செயல் கூறிச்
சுவைத்திடச் செய்தான் சுடர்க்கண் ணப்பா!
தற்புகழ் தள்ளித் தக்கார் தம்மின்
பொற்புகழ் பரப்பும் புலவன் இவனே!

வேற்றா ராளென வேறுபா டின்றி
ஆற்ற லிருந்தால் அன்னவர் தம்மின்
ஏற்றம் போற்றும் ஏந்த லாகத்
தோற்றஞ் செய்து தொண்டாற் றிடுவான்
பரந்த மனத்தன் பணிக்கண் ணப்பா!
சுரந்த அன்பால் சுடர்ந்தோர் தம்மில்
அரிமதி தென்னக அன்பரும் ஒருவர்;
அரியெனப் பாக்குரல் அளிக்கும் திருவர்;
பொன்விழாக் கண்டு புலவர் இவரை
நன்மனத் தோடு நனிமிகப் போற்றினன்

செந்தமிழ்த் தொண்டன் சிவ.கண் ணப்பா!
சிந்தை மகிழ்ந்தார் சேயெனத் தென்னகர்!
இன்னகத் துடனே இரண்டு நூல்களைத்
தென்னகன் படைத்தார் திருமகன் மீதே!
''அரிமதி வெண்பா'' அழகிய மாலை
விரிந்து மணக்கும் விளக்க மெல்லாம்
கண்ணப் பாவின் கவின்வர லாறே!
வண்ணப் பாவில் வழங்குஞ் செய்தியை
உள்ள உள்ள உருகும் நெஞ்சம்
துள்ளி யெழுந்து தூய்மை கொஞ்சும்!

''வாழ்கநீ எம்மான'' வளநூல் தந்ததும்
ஆழ்கலைத் தமிழ்மை அரிமதி தென்னகன்
ஆவார்; ஆய்ந்தவர் அளித்த வெல்லப்
பாவார் செய்தி பகர்வ தெல்லாம்
கண்ணப் பாவின் கண்ணிய மாகும்!
எண்ணச் சிறப்பும் எழிற்செயல் பிறப்பும்
திண்ண மாகத் திகழ்ந்திடும் பெற்றியன்
வண்ண மகனாய் வாழ்கண் ணப்பா!
ஆர்வச் செய்தி அதிகங் கேட்டுச்
சோர்வு களைந்தனை சுகர்மிகு புலவ!

மேலுஞ் செய்தி மேவி நிற்றலால்
சாலச் சொல்வேன்; சற்றுக் கேண்மின்;

என்றன் தம்பி எவர்க்கும் நம்பி;
குன்றா துழைக்கும் குணமிக் குடையோன்;
கண்டார் தமக்குக் கண்டாய் இருப்பான்;
தொண்டர் தமக்கோ தொண்டாய்ச் சிரிப்பான்;
'செந்தமிழ்த் தொண்டன்' சிந்தை கவர்ந்தேன்;
விந்தை யென்று விளம்பு மாறு
பலநூல் தந்தான் பாராட் டிடவே!
பலநிலைக் கலைகளைப் பனுவல் பெற்றதால்,

சாயபு மரைக்கார் சால்புத் தம்பி
நேயப் பெருக்க நெஞ்ச முடைய
ஒல்காப் புகழுடை ஒளிக்கண் ணப்பா
''பல்கலைச் செல்வர்'' பட்டம் வழங்கித்
தம்பி தன்னைத் தட்டிக் கொடுத்தான்
நம்பிநீ வாழ்க நாளு மென்றான்!
எங்கோ இருந்த என்னைப் பற்றியும்
பொங்கொளி மூலம் புரிந்து கொண்டு
'பாவலர்மணி' யெனும் பட்டம் தன்னை
ஆவலாய்த் தந்தான் அருங்கண் ணப்பா!

ஊற்றுச் செய்தியை ஒடுக்கி யுனக்கே
ஆற்றல் கூர்க்க அணுவாய்ச் சுருக்கிச்
சொல்லும் வழியைச் சுடராய்க் கண்டு
வெல்லுக புலவ! வீழ்த்துக வறுமை!
காரைக் காலைக் கடக்கும் போது
நேரு நகரோ நின்னெதிர் தோன்றும்;
வண்ணத் தமிழ்ச்சொல் வாய னான
அண்ணா பெயரில் அமைகல் லூரி
ஆங்கே பல்கலை அறிவு பரப்பி
பாங்காய் விளங்கும் பைந்தமிழ்ப் புலவ!

அண்டைச் சில்லூர் அகன்ற பின்னர்
நண்ட லாறாம் நல்ல எல்லை

காட்சி தந்து கவினாய்த் திகழும்!
மாட்சித் தமிழக மலர்ச்சி தோன்றும்
தரங்கம் பாடும் 'தரங்கம் பாடி'
சுரங்கக் கோட்டை சூழல் தெரியும்
நுவல்பதி னைந்தாம் நூற்றாண் டினிலே
தவழு மிந்தத் தரங்கம் பாடி
சடங்கன் பாடியாய்ச் சாற்றிய செய்தி
அடங்குகல் வெட்டின் ஆய்வில் வந்தது!

பார்'குல சேகர' பட்டின மாகவும்
பேர்தனை இவ்வூர் பெற்ற செய்தியும்
அக்கல் வெட்டில் அடங்கு செய்தியெனத்
தக்கவர லாறு தானுரைத் திடுமே!
துறைமுகப் பட்டினத் துலக்கத் தோடு
நிறைநல் வணிக நீள்வாய் நாவாய்
அலையிசை பாடும் ஆழி மீதில்
அலைந்த செய்தியும் அறிய வருமே!
கிறித்துவக் கோளில் கிளர்சீர் திருத்த
நெறிதனைப் பரப்பும் நிலையின ராகத்

'தென்மார்க்' கிலிருந்து தென்னிசு மக்கள்
நன்முறை நிறுவ நண்ணினர் இவ்வூர்!
மெச்சு தமிழின் மேன்மை யோங்க
அச்சுக் கலையை அளித்த முதலூர்,
தமிழை யுயர்த்திய தரங்கம் பாடியாம்
அமிழ்தூ ரென்றே அறிமின்; களிமின்.
செந்தமிழ் கற்ற 'சீகன் பால்கு'
அந்தமிழ் மொழியில் அரிய பைபிளை
நாட்டில் பரப்பினர்; நன்னூல் பலபனை
ஏட்டி லிருந்ததை எழில்நூ லாக்கினர்!

சீகன் பால்குவின் சிறந்த தொண்டால்
வானக பெற்றது வண்டமிழ் மொழியே
உப்பளம் மிகுந்த உயர்நக ரிதனில்
செப்பச் சூழல் செறிவி னாலும்

உயிர்நலங் காக்கும் †உயர்வளி யொன்று
பயனாய்த் தரங்கம் பாடியில் உலவலால்
சுற்றுலா நகராய்ச் சுடர்நக ரிதனை
வெற்றி பெறச்செய விழைந்து தமிழக
அரசு பணிபல ஆற்றுஞ் செய்தி
முரசென ஆர்த்திடும் முறையே இதழ்களில்!

இவ்வீர் ரொன்று சிறப்பாய் வந்திடும்;
சேவ்வூர் ரொன்று சிறப்பாய் வந்திடும்;
அண்ணல் காந்தியின் ஆவியைக் காத்த
வண்ண மகளாம் வள்ளி யம்மையின்
தில்லை யாடி' திருவூ ரஃதாம்!
நல்லூ ரிதனை நகர்ந்து சென்றால்,
திருக்கடவூரெனும் திருவூர் தென்படும்;
அருள்சுரப் புடைய அரியவூ ரென்பர்!
கண்ணுதல் சிவனோ காலனை யுதைத்த
வண்ண வூரதனை வழியில் காண்மின்;

மணிவிழாக் காணும் மக்கள் முன்னர்
அணியாம் வந்திவன் அருள்வேண் டிடலால்
வாழநாள் மிகுமென வந்து போவர்!
ஆழ்ந்தால் இவ்வூர் அரசர் பலரின்
கல்வெட் டெல்லாம் காணப் படுமூர்;
நல்வளச் சிவனிய +நாயன்மார் சில்லோர்
தோன்றிச் சிறந்த தொன்மை மூதூர்
ஆன்றோர் இறைமை ஆக்க நல்லூர்;
அபிராமி பட்டர் அந்தாதி நூலை
அபிராமி போற்றி அழகாய்ச் செய்தார்!

---

† உயர்வளி—ஓசோன் (ozone) என்ற காற்று.

\+ காரி நாயனார், குங்கிலியக்கலைப நாயனார்.

++மூவர் பாடிய முறையூ ரிதனை
யாவரும் போற்றுவர்; யாண்டுஞ் சிறப்பே!
இவ்வூர் விட்டே இனிதகன் றுட்டால்
செவ்வூ ரொன்றின் சீர்வளை வொன்று
பொலிந்து விளங்கும் 'பூப்புகார்' என்று!

மலிந்த புகழ்சால் மாநக ரிதனை
தெற்றென விளக்கித் தெளிவாய்ச் சொல்வேன்
முற்றுங் கேட்க முத்தமிழ்ப் புலவ!
பைந்தமிழ்த் தாயின் பல்துறைப் பெருமையை
மைந்துடன் சொல்லும் மாட்சிய திவ்வூர்!

வாழுந் தமிழரின் வளஞ்சால் தொன்மை சொல்
சோழ ராட்சியின் சுடரொளித் தலைநகர்!
காவிரி புகுந்து கடனாற் றிடுதலால்
'காவிரிபூம் பட்டினம்' கவின்பெயர் தாங்கும்!
புறமும் அகமும் பூம்புகார் வாழ்வைத்
திறம்படச் சொல்லும் திருநூ லாகும்
பழம்பெரும் புகாரின் பலநிலை பற்றி
விழுமிய செய்திகள் விளம்பு கின்ற
'பட்டுனப் பாலை' பைந்தமிழ் நூலும்
மட்டிய விட்டுப் பகரும் பற்பல!
துறைமுகப் பட்டினத் தொன்மை யூரிது;

நிறைவளப் பொருட்கள் நிரம்பச் செறிவாய்க்
கீழை நாட்டொடு கிளர்ந்தெழுந் பதாங்கி
வாழும் மேலை வளநா டெல்லாம்
வரவேற் கின்ற வணிகப் பொருளாய்
மரக்கலம் மூலம் மண்டிச் சென்றது!
முத்தும் மணியும் கொத்து மிளகும்
மெத்த மணக்கும் மேன்மை யகிலும்
சந்தனத்தோடு சாற்றுநல் லுணவும்
அந்த நாடுற அனுப்பப் பட்டது!

++ திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்.

மரபொரு பழகி மக்களைக் கவரும்
அரபு நாட்டின் அழகிய குதிரைகள்
இறக்கு மதியாம் இன்பொருள் தம்மில்
சிறக்க வந்து சேர்ந்தன புகாரில்!
சிலப்பதி காரம் செம்மணி மேகலை
புலப்பட வைக்கும் புகாரின் வளமை!
தாலமி தந்த தரைநூல் தனிலும்
சால இந்நகர் சார்ந்த செய்திகள்
ஆய்வாய்க் கிடப்பதை அறியலாம் நன்று;
தோய்வில் லாமல் தொன்மைச் சோழர்

ஆண்ட இவ்வூர் அணிபெற் றோங்க
மீண்டும் மலர்ச்சியில் மிளிர்நலம் தாங்கக்
கலைஞக ஆட்சிக் கலைக்கூ டத்தை
நிலைபெற வைத்து நிகழ்த்திய பணிகளால்
சீர்பெற் றிந்நகர் செழிப்பதைக் காண்க;
பேர்வளந் தழைக்கப் பெரும்பணி பேண்க!
தொன்னர் இதனின் தூய நலங்களை
உன்ன வுன்ன உவகை பொங்கும்.
வல்ல நகரிது வந்து போனபின்
செல்லும் வழியில் ‚சீர்காழி' யென்றும்

நன்னகர் ஒன்று நண்ணும் நின்னை;
பொன்னகர் அஃதும் புகழ்சா லூரே!
'சீர்காழி' யென்னும் சிறப்பொளி யூரின்
சீர்மை யுரைப்பேன் செவிகேள் புலவ!
ஊர்வளப் பாங்கும் ஓங்குநற் சீர்த்தியும்
பேர்பல தாங்கும் பெற்றிய திவ்வூர்!
காளிபே ரால் 'சீர் காழி' யாகி
ஆளப் படுமோர் அழகிய நல்லூர்!
சிவனியர் திருவிடச் சிறப்பினைப் பெற்றுத்
தவத்தர் பொங்கும் தமிழொளி பொங்கூர்!

கோவில் பெருமை கொண்ட 'சீர் காழி'
பாவில் மன்னரைப் பாட வைத்தது!
பத்தி நெறிவளம் பரப்பிய பணிஞராம்
சித்தர் தம்மைச் செழிக்க வைததது!
ஞான சம்பந்தர் ஞாயிறு தோன்றிய
தேனார் பிறப்பிடத் திருவூ ரிஃதே!

ஓதப் பாலை ஓடிவந் தூட்ட
மேதினி யன்னை மேன்மை யுமையாள்
உண்ட சம்பந்தர் ஒளிபெற் றோங்கினர்,
தொண்டர் குழாத்தில் தொன்றமிழ் பாடினர்!

நாயன் மார்பலர் நல்லூ ரிதற்கு
நேயப் பாட்டை நெஞ்சுருகத் தந்தனர்!
பாவளம் மிகுநற் பாவலர் பலரும்
நாவளத் தோடு நல்லிசை பாடி
இறையருள் பெற்றதாய் இயம்புவர் சான்றோர்!
நிறைபுகழ் கொண்டது நீணிலத் திவ்வூர்!
*மாலிய மாந்தரும் மகிழ்ந்து போற்றிடும்
கோல விழாக்கள் கொண்ட திவ்வூர்
நீர்வளத தோடு நிலவளப் பாங்கும்
சீர்காழி பெற்ற சிறப்புக ளாகும்!

பாங்கூ ரிதனைப் பயணஞ் செய்தபின்
ஓங்குநீர்க் காவிரி ஓடுவெள் ளத்தைக்
கொள்ளிட மாகிய கொள்ளிட மெனு மூர்
வெள்ளமில் லாற்றின் விரிமணல் செறிய
வெற்றாய் விளங்கும்; வியன்புகழ்க் காவிரி
வெற்றி பெறுநாள் விரைந்து வருக!
இவ்வூர் மருங்கெலாம் இலங்கும் காட்சி
செவ்விய நெய்த்தொழில் சிறப்பினைக் காட்டும்!

---

*வைணவ மக்களும்

கோரைப் புல்லைக் கொண்டு லர்த்திச்
சீராய்ப் பன்னிறஞ் செறிவுறத் தோய்ந்து
கட்டுக் கட்டாய்க் கவினார் கோரை
பட்டெனப் பளிச்சிடும், பார்வை யீர்க்கும்!
வண்ணக் கோரையை வகையா யெடுத்துப்
பண்ணி நெய்திடும் பாய்கள் பற்பல
கண்ணைக் கவரும்; கருத்தைக் கிளரும்;
எண்ணில் பாய்கள் எழிலுடன் மிளிரும்!
இத்தொழி லாளருள் இசுலா மியரே
மெத்தச் செய்து மிளிர்வோ ராக
அவ்வூர்ப் பகுயில் ஆங்காங் கிருந்து
செவ்வையாய் இத்தொழில் செய்கின் றனரே!

வெளிநாட் டுக்கும் விரைவாய்ச் சென்றிடும்
ஒளிப்பாய் தொழிலோர் உயர்தொழி லாகும்!
இன்ன வூரை இனிது கடந்தால்
முன்னே ஒருர் முதன்மையாய்த் தோன்றி
வரவேற் றுன்னை வாவா வென்னும்
பரம்பொரு வாழ் 'சிதம் பரமோ' இன்னே!
கன்னித் தமிழகத் தென்னார்க் கடாம்
பொன்மா வட்டத் தின்னக ராகச்
சிதம்பரம் திகழும் செந்தமிழ் மக்களின்
முதுபெருஞ் சமய முதன்மைத் திருவிடம்!

சிவனுறை கோவிலின் சிறப்பெலாம் பெற்று
தவநிலை தாங்கும் தலைமைக் கோவில்
தகுதியைப் பெற்ற தமிழ்ச்சிதம் பரத்தின்
பகுதி யனைத்தையும் பைந்தமிழ் மக்கள்
கோவி லென்றே கூறி மகிழும்
மேவுஞ் சிறப்பிடம் மேன்மை நகர்க்கே!

முற்றுந் தமிழ்மை முதன்மை யாய்ந்த
வெற்றித் தலைவராய் விளங்கிய புகழ்சால்
தேவ நேயத் திருப்பா வாணர்
ஆவ லுடனே அரனார் நகரிதைச்

'சிற்றம் பல'மெனச் செப்பி மகிழ்வார்
கற்றா ரேத்தக் கல்லிய நிலையில்!
நறுங்கூடத் தாடும் நடரா சனாக
உறுஞ்சிவம் வதியும் உயர்மெய்ப் பொருளில்!
சிவனிய மெய்ப்பொருள் செம்மை யனைத்தும்
தவழுஞ் சிற்பத் தலைமைக் கலையினுள்
செறிய விளங்கும் சிதம்பரம் தன்னை
அறிய அறிய ஆய்வே பொங்கும்!
கூத்தின் மெய்ப்பொருள் கூர்த்து விளங்கும்
மூத்த திருநகர்; முதன்மைத் திருநகர்;

நாயன் மார்கள் நன்னக ரிதனை
நேயத் தோடு நெஞ்சில் நிறுத்திப்
பத்தி பொங்கும் பாத்தேன் தன்னை
முத்தமி ழிசையில் முந்தித் தந்தனர்;
திருமுறை நூல்களாந் தீந்தமிழ்ச் செல்வம்,
அருமுறை யாக அமுத வூற்றாய்ச்
செந்தமிழ்ப் பாட்டில் சிதம்பரம் போற்றும்
முந்தொளி யாக முதன்மை பெற்றது!
அருண கிரியாரின் அருந்நூ லான
திருப்புகழ் நூலும் திருநக ரிதனை

இன்னிசைத் தேனால் இனிது போற்றி
தன்னிலை யுயர்த்தித் தலைமை கண்டது;
இறையின் நேயர் இராம லிங்கர்
முறையார் அருட்பா முத்தமி ழூற்றில்
இந்நகர் போற்றும் இறைமை யன்புச்
செந்நிலை தன்னைச் சிறப்பாய்க் காண்க!
முன்னர் இந்நகர் முற்றிலும் எங்கும்
நன்னர்ச் செறிந்த நனிமிகு கணக்கில்
தில்லை மரங்கள் தென்பட்ட தாலே
தில்லை வனமெனத் திகழ்ந்த திவ்வூர்;

எல்லையில் சிறப்பார் எழில்நக ரிதனைத்
"தில்லை" யென்றே தெரிவித் தனரே!
தஞ்சை யாண்ட தமிழ்ச்சோ ழர்கள்
விஞ்சிப் போற்றிய வியனக ரிதுவாம்!
மன்னர் பலரின் மன்னிய திருப்பணி
நன்னர் வாய்ந்த நகரம் இதுவே!
அம்பலம் ஐந்தால் அரும்பொருள் விளக்கிச்
செம்பொரு ளான சிவன்கோவி லிதனுள்
சிற்றம் பலமெனும் சீரம் பலத்தில்
தெற்றத் தெளிவுடன் திகழும் கமுக்கம்

இறைக்கோ உருவம் இல்லை யென்ற
நிறையொளி தன்னை நிறுவும் திருவிடம்!
இறைமைக் கலையில் ஈடற் றிலங்கும்
நிறைமைச் சிதம்பரம், நெஞ்சினை யுயர்த்தும்

செல்வத் தெல்லாஞ் சீராஞ் செம்பொருட்
கல்வி தனிலுங் கதியென விளங்கும்!
வண்ணக் கல்வி வளர்ச்சித் தந்தை
அண்ணா மலையார் அரும்பெய ராலே
பாரா ரேத்தும் பல்கலைக் கழகம்
சீராய் நடக்குஞ் சிதம்பரத் தினிலே!

இன்ன சிறப்பார் இன்சிதம் பரத்தின்
பின்னொரு பாங்கர் பிச்சா வரமாம்
சுற்றுலா இயற்கைச் சூழல் தன்னைப்
பற்றுடன் பார்க்கப் பலரும் வருவர்!
மாட்சிச் சிதம்பரம் மறைந்த பின்னர்க்
காட்சி வழங்கிடும் கடலூர் முன்னர்
கடலுக் கருகில் காணப் படுதலால்
கடலூ ரென்றிதைக் கழறினர் முன்னோர்!
மணிமுத் தாறும் மாண்வெள் ளாறும்
அணிசேர் கெடிலம் ஆறுகள் மூன்றும்

பீடா யிங்குப் பிணைந்து கூடலால்
கூடலூ ரென்றுமுன் கூறினர் என்பர்!
தொன்மை நகரிது துறைமுகப் பட்டினம்
வன்மைக் கோட்டையும் வரலாற் றுயர்வும்
பெற்ற நகரிது பெருமை வாய்ந்தது
நற்றவச் சுந்தரர் நறும்பா பெற்றது!
முசுலிம் மக்கள் முன்னொரு காலம்

'இசுலாமா பரத்'தென இந்நகர் தன்னை
செப்பினர் என்ற செய்தி பற்றி
இப்போதும் அறியலாம் இன்வர லாற்றில்

கடலூர் விட்டுக் கடக்கும் வழியில்
இடையில் பாகூர் இன்வழி தோன்றும்;
பொலிவார் பாகூர் புதுவை மண்ணின்
நலிவில் ஊரென நவிலல் சாலும்!
வாணி தாசர் வாழ்ந்த பகுதி
மாணார் ஊரிதன் மருங்கி லாகும்!
புரிந்து கொண்டு போவாய் புலவ,
அரியாங் குப்பம் ஆங்குத் தோன்றும்;
அன்றிதன் கிழக்கே அரிக்க மேட்டில்
நின்றாய்ந் தவர்கள் நிறுவிய செய்தி,

செந்தமிழ் மக்களின் செழிப்பு வாழ்வின்
சிந்தல் களாகும்; சிதறல் களாகும்;
அரிக்க மேட்டின் அகழ்வா ராய்ச்சி
விரிக்குஞ் செய்தி வியன்றமிழ் வீறாம்
இவ்வழி விட்டே இன்னுஞ் சென்றால்
செவ்வழி யொன்று செவ்வனே கிளைக்கும்;
வீராம் பட்டினம் விரையும் வழியது;
சீரார் இந்தச் செழும்பட் டினத்தில்
வீரை வெளிய னாரென விளம்பிடும்
போரைக் கூறும் புறநா னூற்றின்

புலவர் ஒருவர் புகழுடன் வாழ்ந்தார்;
பொலிவார் இந்தப் பொன்னூர் தன்னில்
திகழும் விழாவாம் தேரோட் டத்தை
மகிழப் பார்க்கும் மக்கள் பல்லோர்
சீராய்க் கூடுஞ் செவ்வூ ராகும்
வீராம் பட்டினம் விளங்குக புலவ!

எல்லா வூரும் ஏகிய பின்னர்
நல்ல வள்ளல் நம்கண் ணப்பா
வாழும் நகரம்; வனப்பு நகரம்
தாழா தோங்கும் தமிழ்மை நகரம்;

வாவென் றுன்னை வரவேற் றிடுமே
போவாய் புலவ புதுச்சே ரிக்கே!
பேருந் தேறிப் பெருநகர் புதுவை
சீருடன் சென்று சிறப்பினைக் காண்மின்!
ஊரழ குக்கோ உயர்ந்த புதுவை
வேராய் நிற்கும்; வியன்தெரு வெல்லாம்
நேராய் நிற்கும் நிலைதனைக் காண்பாய்;
பாராய் என்னும் பலவெழிற் காட்சி!
தொடர்ந்து விளங்கும் தொழிலகத் தோற்றம்;
அடர்ந்து திகழும் அணிக்கடை ஏற்றம்;

பாங்காய்ப் பொலிந்திடும் பூங்காக் கூட்டம்;
ஆங்காங் கிலங்கும் அணிமரத் தோட்டம்;
கல்விச் சாலைகள் கணக்கற் றிருக்கும்;
செல்வச் சோலைகள், செவ்வீ டீர்க்கும்:
நுண்மதி வளர்க்கும் நூலகம் பலவாம்;
வெண்மதி போல விளங்கிடும் நகரம்;
மலிவாய்க் கிடைக்கும் மதுக்கடை சென்றால்
நலிவா யதனால் நன்னெறி நடப்பாய்;
ஆழி யழகும் அலைகளின் அழகும்
வாழியென் றுன்னை வரவேற் றிடுங்காண்!

சீர்நகர் சென்றதும் சிவ.கண் ணப்பா
பேர்தனைச் செப்புக; பெரியார் சிறியார்
எவரும் அறிவர் ஏந்தல் பெயரை!
தவறா துரைப்பர் தக்கோன் பெயரை!
வள்ள லவன்பேர் வலிமை மிக்கது;
அள்ளிக் கொடுக்கவும் ஆவன செய்யவும்

தோன்றிய பெயரது; தொண்டின் பெயரது;
ஆன்றோர் சான்றோர் அனைவரும் அறிவது!
தமிழைக் காக்கும் தலைமகனாக
அமிழ்தாய் விளங்கும் அவனைக் கண்டு

நொந்தநின் நிலைமையை நுவல்மின் கேட்பான்
செந்தமிழ்த் தொண்டன் சிவ. கண்ணப்பா!
மிடிமை யோடும்; மீட்சி காண்பாய்;
அடிமை தகரும்; ஆட்சி காண்பாய்;
சோர்வு போகும், சுவைப்பு பொங்கும்;
ஆர்வம் ஆற்றல் அதிக ரிக்கும்;
கற்றநின் பெருமை வெற்றி யாகும்,
அற்றிடும் துன்பம்; உற்றிடும் இன்பம்;
உதவி கிடைக்கும்; உனக்கோ உயர்ந்த
பதவி கிடைக்கும்; பணமும் கிடைக்கும்;

பட்டம் கிடைக்கும்; பணிக ளாற்றத்
திட்டம் கிடைக்கும்; தெளிவு கிடைக்கும்;
வண்ண ஆடை வகைகள் கிடைக்கும்;
எண்ணந் தளரேல் எல்லாம் கிடைக்கும்;
வாழ்மை ஒளிரும்; வளமை பெருகும்;
ஏழ்மை யேகும்; ஏற்ற மாகும்;
வெற்றி விரையும்: வெம்மை விலகும்;
முற்றும் நலங்கள் முதிர்ந்து துலங்கும்;
சுணக்கம் போக்குக; சுடரைத் தூக்குக;
இணக்க மாகும்; இன்பம் பொங்கும்;

தவறேல் செல்க தழைக்க
சிவ. கண்ணப்பா செம்ம லிடமே.

பாவலரைப் பற்றி...

- ☐ காரைக்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட பாவலர் காரை-இறையடியான் 17-11-1935 இல் பிறந்தவர்; முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பாடல்கள் புனைந்து வருபவர்.
- ☐ "பூஞ்சோலை" என்னும் தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழை ஒன்பது ஆண்டுகள் நடத்தியவர்
- ☐ மொழியியல் அறிஞர் தேவநேயப் பாவாணருடன் நெருங்கிய தொடர்புடையவர்; அவர்தம் உலகத்தமிழ்க் கழகத்தில் மாவட்டத் தலைவராகப் பணியாற்றியவர்.
- ☐ கவியரசு கண்ணதாசன், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, பாவலரேறு பெருஞ்சித்திரனார், உவமைக் கவிஞர் சுரதா போன்ற பாவலர்களால் பாராட்டப் பட்டவர்.
- ☐ மதுரை எழுத்தாளர் மன்றம், சென்னை தமிழ்க்கவிஞர் பெருமன்றம் மற்றும் பல்வேறு அமைப்புகள் நடத்திய பாடல் போட்டிகளில் பரிசு பெற்றவர்.
- ☐ தமிழ் நாடு குழந்தை எழுத்தாளர் சங்கம் 1978 ஆம் ஆண்டு நடத்திய குழந்தை இலக்கியப் போட்டியில் ஏவி. எம். அறக்கட்டளையின் வெள்ளிப் பதக்கத்தை வென்றவர்.
- ☐ "தமிழமுதம்" என்ற இவருடைய பாத்தொகுப்பு 1987 ஆம் ஆண்டின் தலை சிறந்த பாடல் நூலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தமிழக அரசின் பரிசைப் பெற்றுள்ளது.
- ☐ புதுவை தனித்தமிழ்க் கழகம் இவர்தம் தனித்தமிழ்ப் பணியைப் பாராட்டித் "தனித்தமிழ்த் தென்றல்" என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கியுள்ளது.
- ☐ உலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தின் சார்பில் டாக்டர் கலைஞர் அவர்களால் "கவிமாமணி" என்ற பட்டமும், புதுவை இளங்கோவடிகள் மன்றத்தின் சார்பில் செந்தமிழ்த் தொண்டர் சிவ. கண்ணப்பா அவர்களால் "பாவலர் மணி" என்ற பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.